


# SRCAS PULSE

An IQAC Initiative

20th July, 2022




SRCASofficial

www.srcas.ac.in

# Parents Meeting - Physics


















# அவசர உதவிக்கு '100', '101' மட்டுமல்ல '104-யும்' அழைக்கலாம்

நம்முடைய அவசரத் தேவைக்கு காவல்துறையை'100', தீயணைப்புத் துறையை '101' என்ற எண்களில் அழைப்பதைப் போல், அவசர மருத்துவ உதவிக்கு எண் '104' ஐ அழைக்கலாம். 100-ம், 101-ம் நமக்கு பரிச்சயமானதைப் போல், ஏனோ எண் 104 பரிச்சயப்படவில்லை. சரி 104 என்ற இலவச அழைப்பு எண்ணில் என்னென்ன நன்மைகளை நாம் பெற முடியும் என்பதைக் காணலாம்.

பொதுமக்கள் மருத்துவ உதவி குறித்த ஆலோசனைகளை இலவசமாகப் பெறும் வகையில், கடந்த தமிழக அரசால் 2013-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 108 ஆம்புலன்ஸ் சேவையை அளிக்கும் நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 104 எண்ணைத் தொடர்புக் கொண்டால் சென்னையில் உள்ள தலைமைக் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டு, அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் மூலமாக பொதுமக்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

மிக அவசரம் என்றால், 108 எண்ணுடன் இணைக்கப்பட்டு, ஆம்புலன்ஸ் சேவையும் ஏற்படும். உடல் நலன் மட்டுமின்றி மனநலனுக்கு சிறந்த ஆலோசனைகளை பொதுமக்கள் இந்த எண்ணில் பெறலாம். எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த மருத்துவமனையில் சிகிச்சைப் பெற முடியும் என்பதையும் இந்த எண்ணில் அறியலாம்.

மருத்துவச் சேவைக்கு பலவிதமான மருத்துவ உபகரணங்கள் இருந்தாலும், எப்போதுமே அத்தியாவசியத் தேவையாக இருப்பது, ரத்தம். பொதுவாக அறுவை சிகிச்சை என்றாலே, நோயாளிக்கு அவரது வகையின் ரத்தம் தேவைப்படும். மருத்துவமனையில் உள்ள ரத்த வங்கிகள், தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள், கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை போன்ற அமைப்புகளும் ரத்ததானம் கொடுக்கின்றன.

இருப்பினும் ரத்ததானத்திற்கான தேவை குறைந்தபாடில்லை. காரணம் நோயாளிகளின் ரத்தவகையே, தானமாகக் கிடைக்க வேண்டும் அல்லது




நோயாளிகளின் ரத்த வகையுடன் பொருந்தும் மாற்று வகை ரத்தம் கிடைக்க வேண்டும். ரத்ததானம் கோரி வாட்ஸ்-அப், முகநூல்களில் நாள்தோறும் ஏராளமான குறுந்தகவல்கள் உலா வருவதைக் காண முடியும்.

நகர்புறங்களில் உள்ளவர்களுக்கு எளிதாக ரத்தம் கிடைத்துவிடும் சூழ்நிலையில், கிராமப்புறப் பகுதிகளில் நோயாளிகள் ரத்தம் தேவைக்காக நகர்புற மருத்துவமனைகளை நோக்கி மாற்ற வேண்டிய சூழ்நிலை பல நேரங்களில் ஏற்படுகிறது. இத்தகைய சூழலில் 104-ஐ அழைத்து தகவல் தெரிவித்தால், அருகில் உள்ள மருத்துவமனைகளிலோ அல்லது ரத்த வங்கிகளிலோ, தனியார் மருத்துவமனைகளிலோ ரத்தம் பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

இருப்பினும் ரத்தம் தேவைக்கு, இந்த எண்ணில் மட்டுமே தகவல் தெரிவித்துவிட்டு, காத்திருக்காமல், குருதிக் கொடையாளர்களின் எண்களைப் பெற்று உதவி கோருவது சிறந்தது. ஏனெனில் ரத்தம் பெறுவதற்காக அறுவை சிகிச்சையைத் தள்ளிப் போடுவது, நோயாளிக்கு பாதிப்பை அதிகரிக்கும். இன்று மாவட்டம் வாரியாக ரத்ததான வாடஸ்-அப் குழுக்கள் செயல்படுகின்றன. அவற்றில் இணைந்துக் கொள்வது, நமக்கு மட்டுமல்லாமல் நம்மைச் சார்ந்தவர்களுக்கு அவசரத் தேவைகளுக்குப் பயன்படும். ஓர் உயிர் காப்பாற்றப்படலாம்.

**- முனைவர் த.சத்தியசீலன்,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை.**

# வண்ணத்தூரிகை











**Yokesh Kumar R**

(21209120) - II MBA

## "I do"... Photography







**Swetha D**

**(21107060) - II B.Sc IT**

# Staff Achievement

Congratulations **Dr.I.Parvin Banu,** Asso.Prof & Head, Department of International Business received appriciation from AICTE ATAL Academy.



Certificate No. ATAL/2022/1658239980

ALL INDIA COUNCIL FOR TECHNICAL EDUCATION

Nelson Mandela Marg, Vasant Kunj, New Delhi – 110 070

AICTE Training And Learning (ATAL) Academy

ATAL

**Certificate of Appreciation**

*This is certified that **Dr. I. Parvin Banu, Associate Professor** of **Sri Ramakrishna College of Arts and Science , TAMIL NADU** has successfully coordinated **ATAL Online Faculty Development Programme** on " **Innovation and Edutainment for effective Teaching and Learning for Gen Z students"** from **06/09/2021** to **10/09/2021.***

Adviser-I, ATAL Academy

# நூலகம் எனும் அறிவுக்கிடங்கு!

"நான் மறைந்த பிறகு என் உடல் மீது மலர் மாலைகளை வைக்க வேண்டாம்; என் மடிமீது புத்தகங்களைப் பரப்புங்கள்" என்று புத்தகங்கள் மீதான தன் தீரா வேட்கையை வெளிப்படுத்தியவர் நாட்டின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேரு. புத்தகங்களால் உயர்ந்தவர்கள் உலகில் பலர் உள்ளனர்.

அதுதான் புத்தகங்களுக்கு உண்டான சிறப்பு. உலகில் புத்தகங்களுக்கு எத்துணை சிறப்பு இருக்கிறதோ அத்துணை பெருமை கொண்டவையாக விளங்குகின்றன நூலகங்கள். அறிவுக்கிடங்காக, அறிவின் புதையலாக அவை தொடர்ந்து இயங்கி வருகின்றன. கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைத்து எதிர்காலத்தை உருவாக்கும் ஆற்றல் மையங்களாக நூலகங்கள் திகழ்கின்றன.

உலகில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை **26 லட்சம்**

ஆசியாவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை **19 லட்சம்**

இந்தியாவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை **15 லட்சம்**

## அந்தகால நூலகங்கள் குறித்து ஒரு பார்வை...



### உலகின் முதல் நூலகம்

- நிறுவப்பட்டது கி.மு. 7-ஆம் நூற்றாண்டு
- மத்திய கிழக்கின் நினேவா பகுதியில் (தற்போதைய இராக்) அசிரிய ஆட்சியாளர் அசுர்பனிபால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- பண்டைய மத்திய கிழக்கின் எழுத்துகளால் ஆன சுமார் 30,000 கல் வெட்டுகளையும் பதிவுகளையும் கொண்டிருந்தது.
- அப்போதைய அறிஞர்களின் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன.

## நாகரிகங்களின் நூலகங்கள்

உலகின் பல்வேறு பகுதிகளில் நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தபோது நூலகங்களும் வளர்ந்தன.



### அலெக்ஸாண்டிரியா நூலகம், எகிப்து

- கிரீஸ், பாரசீகம் (இன்றைய ஈரான்), எகிப்து, இந்தியா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 7,00,000 ஆவணங்கள் இருந்தன.

### கலீஃப் அல்-அகம் நூலகம்

- இடம்: கோர்டோபா, ஸ்பெயின்
- நிறுவப்பட்டது 10-ஆம் நூற்றாண்டு
- 4,00,000-க்கும் அதிகமான புத்தகங்கள்

## உலகின் மிகப் பெரும் நூலகங்கள்

### பிரிட்டிஷ் நூலகம், லண்டன்




- நிறுவப்பட்டது 1973
- புத்தகங்கள், இதழ்கள், நாளிதழ்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 17 கோடி முதல் 20 கோடி வரை

### லைப்ரரி ஆஃப் காங்கிரஸ், வாஷிங்டன், அமெரிக்கா



- நிறுவப்பட்டது 1800
- அமெரிக்காவின் தேசிய நூலகமாக உள்ள நாடாளுமன்ற நூலகம்
- புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 17 கோடி

### ஷாங்காய் நூலகம், சீனா



- நிறுவப்பட்டது 1847
- புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 5.6 கோடி

## இந்தியாவின் முக்கிய, பழைமையான நூலகங்கள்

### திருவனந்தபுரம் நூலகம், கேரளம்




- நிறுவப்பட்டது 1829
- நிறுவியவர்: அரசர் ஸ்வாதி திருநாள்

### சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்



- நிறுவப்பட்டது நாயக்க மன்னர்கள் காலம்
- நாட்டின் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட அரிய ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### கன்னிமாரா நூலகம், சென்னை




- நிறுவப்பட்டது 1896
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று. நாட்டில் வெளியாகும் அனைத்து நூல்கள், இதழ்கள், நாளிதழ்களின் ஒரு பிரதி இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### இந்திய தேசிய நூலகம், கொல்கத்தா



- நிறுவப்பட்டது 1836
- புத்தகங்களின் எண்ணிக்கை: 26.41 லட்சம்
- நாட்டுக்கு அர்ப்பணிப்பு: பிப்ரவரி 1, 1953
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று.

### தில்லி பொது நூலகம்



- நிறுவப்பட்டது 1951
- புத்தகங்களின் எண்ணிக்கை: 18 லட்சம்.
- ஹிந்தி, ஆங்கிலம், உருது, பஞ்சாபி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று.

### சேஷாத்ரி நினைவு நூலகம், பெங்களூரு



- நிறுவப்பட்டது 1915
- புத்தகங்களின் எண்ணிக்கை: 3 லட்சம்
- விருது: ராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை விருது (1999-2000)

---

TnpscBooks Page சார்பில்,

## டி.என்.பி.எஸ்.சி தேர்வர்களுக்கு அனைத்து பாடநூல் Pdf வடிவில் பதிவேற்றம்


**டெலிகிராம் ஆப் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்**

**சென்னை, ஜூலை 17-**

Tnpscbooks குரூப்-1, குரூப்-2, 2ஏ குரூப் 4, VAO போன்ற போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பாடநூல் PDFவடிவில் எளிதாக பதிவிறக்கம் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது.

Telegram ல் "tnpscbooks_Official" page யில் போட்டித் தேர்வுகளுக்கு பயன்படும் வகையில் அனைத்து SYLLABUSகளும் எளிய முறையில் பதிவிறக்கம் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்வுகளுக்கு மிகவும் பயனுள்ள 150 PDF பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது

மனதில் எளிதில் பதியும் வண்ணம் 5000ஒருவரி வினாக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் பயிற்சி செய்ய முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.




இந்த டிஎன்பிஎஸ்சி பாடநூல்களை பெற விரும்புவர்கள் Telegram சென்று Search box ல் "tnpscbooks_Official" என டைப் செய்து இணைந்து கொள்ளுங்கள் அனைத்து Pdf வடிவில் அதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது நீங்கள் இலவசமாக டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:
Instagram page ID : @tnpscbooks

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

A Unit of M/s SNR Sons Charitable Trust

SNR SONS TRUST

Co-Ed, Accredited by NAAC with A+ Grade, Ranked 84th in NIRF 2021 | An ISO 9001:2015 Certified Institution

## PROGRAMMES OFFERED

### COMMERCE - UG

B.Com, B.Com (CA), B.Com (PA), B.Com (BPS), B.Com (IB), B.Com (IT), B.Com (CS), B.Com (B&I), B.Com (RM), B.Com (CMA), B.Com (A&F)

### MANAGEMENT SCIENCE - UG

BBA, BBA (CA)

### COMPUTING - UG

BCA, B.Sc (CS), B.Sc (IT), B.Sc (CS&CS),
B.Sc Computer Science and Data Analytics
B.Sc Computer Science
(Artificial intelligence and Data Science)

### SCIENCE AND HUMANITIES - UG

B.Sc (Electronics and Communication Systems), B.Sc (Maths), B.Sc (Physics), B.Sc (Chemistry), B.Sc (Biotechnology), B.Sc (CS & HM), B.A (Eng. Lit.),

### POST GRADUATE PROGRAMMES

MBA (AICTE Approved), MSW, M.Com, M.Com (IB), M.Sc (CS), M.Sc (IT), M.Sc (Maths), M.Sc (Electronics and Communication Systems), M.Sc (Biotechnology), M.A (Eng.Lit.)

### INTERNATIONAL EXPOSURE

Do your Course/Semester abroad at
- Asia Pacific University, Malaysia
- Sunway University, Malaysia

### STATE-OF-THE-ART INFRASTRUCTURE

- Flood Lit - Cricket
- Flood Lit - Fives Football
- Badminton, Basketball

### INDUSTRY INTEGRATION

- Tata Consultancy Services
- IBM
- Google Certification
- TCS ION
- MAAC

### RANKED IN TOP 50 COLLEGES (ALL INDIA) BY LEADING MAGAZINES

### SPECIAL FEATURES

- ★ 27 Clubs for societies
- ★ 89 Job/Skill oriented courses
- ★ MOE's Innovation Centre for Idea to Innovation
- ★ DBT Star College
- ★ Sports scholarship for National and State Level Players

Medical concession to students, staff, parents and alumni at Sri Ramakrishna Hospital

www.srcas.ac.in





7373085666 | 9942320001

# ADMISSIONS OPEN
## FOR THE YEAR 2022 - 2023

# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)

Formerly SNR Sons College

**Re-Accredited with 'A+' Grade by NAAC**
**Ranked 90th in NIRF 2022**
**Coimbatore - 641 006, India.**



**CONVENOR**

**Dr.D.Sampath Kumar**
Associate Professor - Information Technology

**COORDINATORS**

**Media**
**Dr.T.Sathiyaseelan**
Assistant Professor - Tamil

**Technical**
**Dr.P.Manikandaprabhu**
Assistant Professor - Computer Science

dailynews@srcas.ac.in

SRCAS/IQAC/Pulse/2022-22